

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதியில் பகுதி செயலாளர் இரா.லட்சுமணன் ஏற்பாட்டில் ஒரணியில் தமிழ்நாடு இணையவழி உறுப்பினர் சேர்க்கை பயிற்சி முகாம் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, தொகுதி பார்வையாளர் கே.வி.லோகேஷ், என்.மருதுகணேஷ், ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, வெ.சு.சத்யநாராயணன்,சி.மணிகண்டன், என.எம்.கதிரேசன், நா.கோதண்டன், மா.நாகராஜன், ப.குமார், ச.தமிழ்ச்செல்வன், பொ.து.ராஜா, ஜெ.பிரேம்ஆனந்த், மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் வட்டக் கழக நிர்வாகிகள் மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பாக முகவர்கள் (பிஎல்ஏ2), தகவல் தொழில்நுட்ப அணி பாக முகவர்கள் (பிடிஏ) கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




ஓரணியில் தமிழ்நாடு எனும் உறுப்பினர் சேர்ப்பு திட்டத்தினை வெற்றிபெறச் செய்ய, சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் ஆயிரம்விளக்கு சட்டமன்றத் தொகுதி BDA மற்றும் BLA2 நிர்வாகிகளுக்கு 'மக்களுடன் ஸ்டாலின்' செயலியைப் பயன்படுத்தி உறுப்பினர் சேர்க்கை மேற்கொள்வது குறித்த பயிற்சி கூட்டம் நுங்கம்பாக்கம், கங்கைகரைபுரத்தில் அமைந்துள்ள ரமா திருமண மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், தொகுதி பார்வையாளர் வே.கௌதமன் மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர், வி.எஸ்.கலை, ஜெ.எஸ்.அகஸ்டின்பாபு, பகுதிக் கழக செயலாளர்கள் மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம், மற்றும் வட்டக் கழக செயலாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், தகவல் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள், புதிதாக நியமிக்கப்பட்ட பாக சமூக வலைத்தள முகவர்கள் (BDA) மற்றும் பாக முகவர்கள் (BLA2 என அனைவரும் கலந்துகொண்டனர்.

# திருவள்ளூர் மேற்கு மாவட்ட ஒன்றிய - நகர - பேரூர் கழக BLA 2 BLC ஆலோசனை கூட்டம்!

## மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர் இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனைப்படி, திருவள்ளூர் மேற்கு மாவட்டம், திருவள்ளூர் மற்றும் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தல் மேற்கொள்ள வேண்டிய பணிகள் மற்றும் ஓர் அணியில் தமிழ்நாடு பரப்புரை குறித்து BLA 2- BLC 2 ஆலோசனைக் கூட்டம் கீழ்கண்ட அட்டவணைப் படி ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் தலைமையில் நடைபெறுகிறது.

**திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதி**

**நாள் 30-06-2025 திங்கள் கிழமை**

| நிர்வாகம் | தலைமை |
|---|---|
| திருவள்ளூர் நகரம் | சி.சு.ரவிச்சந்திரன் நகரச் செயலாளர் |
| பூண்டி மேற்கு ஒன்றியம் | டி.கிறிஸ்டி(எ) அன்பரசு ஒன்றிய கழக செயலாளர் |
| கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் | கே.அரிகிருஷ்ணன் ஒன்றிய கழக செயலாளர் |
| கடம்பத்தூர் மேற்கு ஒன்றியம் | மோ.ரமேஷ் ஒன்றிய கழகச் செயலாளர் |
| திருவலாங்காடு கிழக்கு ஒன்றியம் | எஸ்.மகாலிங்கம் ஒன்றிய கழகச் செயலாளர் |
| திருவலாங்காடு மேற்கு ஒன்றியம் | கூளுர் எம்.ராஜேந்திரன் ஒன்றிய கழக செயலாளர் |

**திருத்தணி சட்டமன்றத் தொகுதி**

**நாள் 30—06-2025 திங்கள் கிழமை**

| | |
|---|---|
| திருத்தணி நகரம் | வி.வினோத்குமார் நகரச் செயலாளர் |
| திருத்தணி கிழக்கு ஒன்றியம் | ஆர்த்தி ரவி |
| | ஒன்றிய கழக பொறுப்பாளர் |
| திருத்தணி மேற்கு ஒன்றியம் | என்.கிருஷ்ணன் ஒன்றிய கழகச் செயலாளர் |
| திருத்தணி தெற்கு ஒன்றியம் | கே.ராஜேந்திரன் ஒன்றிய கழக பொறுப்பாளர் |
| திருத்தணி வடக்கு ஒன்றியம் | விஜயகுமார் ஒன்றிய கழக பொறுப்பாளர் |
| ஆர்கே பேட்டை தெற்கு ஒன்றியம் | பெ.பழனி ஒன்றிய கழக பொறுப்பாளர் |
| ஆர்கே பேட்டை வடக்கு ஒன்றியம் | சி.என்.சண்முகம் ஒன்றிய கழக பொறுப்பாளர் |
| ஆர்கே பேட்டை கிழக்கு ஒன்றியம் | பா.சம்பத் ஒன்றிய கழக பொறுப்பாளர் |
| ஆர்கே பேட்டை மேற்கு ஒன்றியம் | மா.இரகு ஒன்றிய கழக பொறுப்பாளர்ச் |
| பள்ளிப்பட்டு வடக்கு ஒன்றியம் | சி.ஜெ.சீனிவாசன் ஒன்றிய கழக செயலாளர் |
| பள்ளிப்பட்டு தெற்கு ஒன்றியம் | ஜி.ரவீந்திரா ஒன்றிய கழகச் செயலாளர் |
| பள்ளிப்பட்டு மத்திய ஒன்றியம் | பி.டி.சந்திரன் ஒன்றிய கழக பொறுப்பாளர் |
| பள்ளிப்பட்டு பேரூர் கழகம் | சி.ஜெ.செந்தில் குமார் பேரூர் கழக பொறுப்பாளர் |
| பொதட்டூர்பேட்டை பேரூர் கழகம் | டி.ஆர்.கே.பாபு பேரூர் கழக செயலாளர் |

மேற்கண்ட நிகழ்ச்சியில் ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர் சிறப்பான முறையில் கூட்டத்தை ஏற்பாடு செய்து சம்பந்தப்பட்ட நிர்வாகிகளுக்கு தகவல் கொடுத்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

திருத்தணி **எஸ்.சந்திரன்** எம்.எல்.ஏ
செயலாளர் திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக

### காரம்பாக்கம் க.கணபதி தலைமையில் – முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் – செம்மொழி நாள் விழா!

# மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி சார்பில் 3102 மகளிருக்கு நலத்திட்ட உதவிகள் - மாபெரும் பொதுக்கூட்டம்!

## டி.ஆர்.பாலு எம்.பி. - திருச்சி சிவா எம்.பி. - அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

சென்னை, ஜுன்.29-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பில் "மகளிர் விடுதலைக்குப் பாடுபட்ட மணணுரிமைச் சூரியன்" தமிழின தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு 3102 மகளிருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி மாபெரும் பொதுக் கூட்டம் 27.06.2025 வெள்ளிக்கிழமை மாலை வளசரவாக்கம், எஸ்.வி.எஸ். நகர், கலைஞர் திடலில் பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ. தலைமையிலும், மதுரவாயல் வடக்குப் பகுதி கழக செயலாளர் நொளம்பூர் வே.ராஜன். எம்.சி., முன்னிலையிலும், தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ். அருணாசலம், தலைமை பொதுக் குழு உறுப்பினர்கள் இராமாபுரம் வ.செல்வகுமார், எம்.சி., பகுதி, ஒன்றிய கழக நிர்வாகிகள் பி.எம்.செல்வராஜ், வே.மதியழகன், இரா. பால்பாண்டியன், எஸ். பாரதி, எம்.சி., கே.ராஜீ, எம்.சி., ஆர்.கர்ணல், தீ. பாலாஜி, எம்.ஏ.செந்தில்சுரேஷ், ஆ.மாலினி, எம்.சி., ம.உதயகுமார், என்.ஜெயச்சந்திரன், ஆர்.கௌரிசங்கர், என். ரவி, வட்ட கழக செயலாளர்கள் எஸ்.ரமேஷ்ராஜ், த.ரமேஷ், சி.சுந்தர், ஜெ. பாஸ்கரன் (பொறுப்பாளர்), தி.சார்லஸ், ஆ.செல்வம், எஸ்.ஜி.மாதவன், எம். கே.பி.அண்ணாதாசன், எம். எம்.ஜெயரத்தினம், சி.சசிகுமார், ப.ஆலன், எம்.ரூபன், மாவட்ட பிரதிநிதிகள் வி.விஜயன், ஆர்.விஜயன் ஆகியோர் வரவேற்புரையிலும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழக பொருளாளர், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக துணை பொதுச் செயலாளர், நாடாளுமன்ற மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா எம்.பி, சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் ஆகியோர் கலந்து கொண்டு நலத் திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை யாற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் எ.எம்.வி.பிரபாகரராஜா, எம்.எல்.ஏ. மாநில தேர்தல் பணிக் குழு செயலாளர் வேளச்சேரி பி.மணிமாறன், எம்.சி.,

மாவட்ட கழக நிர்வாகிகள்: பாலவாக்கம் த.விஸ்வநாதன், எம்.சி., பாலவாக்கம் மு.மனோகரன், எஸ். பாஸ்கரன், எம்.சி., மாவட்ட அமைப்பாளர்கள் வி.ராஜேஷ், கே.குமரேசன், எஸ்.பி.அருள், இ.அ.மா.து. அமைப்பாளர்கள் செ.ரவி, ச.சங்கர்கணேஷ், எம்.சி., மு.மா.து. அமைப்பாளர்கள் எஸ். பாலமுருகன், முகப்பேர் கே.நீலகண்டன், பகுதி கழக செயலாளர்: கே.கண்ணன், எம்.சி.,

பொதுக்குழு உறுப்பினர்: சைதை மா.அன்பரசன், மதுரவாயல் தெற்கு - வடக்கு பகுதி மாமன்ற உறுப்பினர்கள்: செல்விரமேஷ்,எம்.சி., ஹேமலதாகணபதி,எம்.சி., சாந்தி இராமலிங்கம் எம்.சி., எம்.இ.ஸ்டாலின் எம்.சி., ரமணிமாதவன் எம்.சி., மாவட்ட பிரதிநிதிகள்: க.கைலாசம், இரா.ராஜேந்திரன், எம்.எல்.நாதன், எஸ். ரவி, ஏ.டி.எத்திராஜ், ஜி. ராமகிருஷ்ணன், எஸ்.திருநாவுக்கரசு, கே.நாராயணன், ஆர்.சிவலிங்கம், கோ.ராமலிங்கம், க.பிருந்தாவனன், ஆர்.ரசூல்தீன், ஆர்.ராகேஷ், ச.எழில்அரசு, கே.ராஜ்கு மார், கே.முரளி, பி.சங்கர், எம்.ஆர்.சதீஷ், ஜி.குப்புசாமி, எம். கே.ஞானசேகரன், கு.சதீஷ் குமார், மற்றும் மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், அணிகளின் பகுதி, ஒன்றிய அமைப்பாளர்கள், மதுரவாயல் தெற்கு, வடக்கு பகுதி வட்ட கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இறுதியாக வட்ட கழக செயலாளர் அ.மோசஸ், பகுதி தொழிலாளர் அணி அமைப்பாளர் பூத்தப்பேடு பி.ரகு ஆகியோர் நன்றியுரையாற்றினார்கள்.

### கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு தலைமையில்– கடலூர் மேற்கு மாவட்டம்

# திட்டக்குடி - விருத்தாசலம் - நெய்வேலி - பண்ருட்டி தொகுதிகளின் பாக முகவர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை!



கடலூர், ஜுன் 30 -

கழக தலைவர் முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி, விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி, ஆகிய சட்ட மன்ற தொகுதி BLA 2. ( பாக நிலை முகவர்கள்) ஆலோசனைக் கூட்டம் நடைபெறுவதையொட்டி மாவட்ட செயலாளர் அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கைவிடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

கடலூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும்பாக முகவர்கள் கூட்டம் கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் இன்று (30.06.2025) மாலை 4 மணியளவில் சென்னை கும்ப கோணம் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள காடாம் புலியூர் ஏ.வி. மஹாலில் நடைபெறுகிறது.

அதுசமயம் தொகுதி பார்வையாளர்கள், முன்னாள் இந்நாள் சட்ட மன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர கழக, பேரூர்க் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள், தொ.மு.ச நிர்வாகிகள் BLA2 ( பாக நிலை முகவர்கள்) அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் அமைச்சர் சி.வி. கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனை பொதுக்கூட்டம் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் க.பிரகாஷ் ஏற்பாட்டில் நடைபெற்றது. அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றிய செயலாளரும் ஒன்றிய பெருந்தலைவருமான ஒரத்தி கண்ணன் தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் பவானி கண்ணன் கலந்து கொண்டு பேசினார். அருகில் இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் யுவராஜ், மத்திய ஒன்றிய பொறுப்பாளர் கோகுல கண்ணன் ஒன்றிய நிர்வாகிகள் ரத்தினவேல், சிவக்குமார், ஆதி திராவிட நல துணை அமைப்பாளர் சிவக்குமார், சாரதி,பேக்கரி ரமேஷ் , மின்னல் சித்தாமூர் ஊராட்சி தலைவர் பாலாஜி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பாண்டியன், சுதாமன், தனஞ்செயன், தெய்வ சுந்தரம், துரை கணேஷ், ஜெயக்குமார் ஆகியோர் உள்ளனர்.

### மேட்டூர் அணைக்கு கர்நாடக அணையிலிருந்து உபரி நீர் திறப்பு!

# நீரினை விவசாயிகள் சிறந்த முறையில் பயன்படுத்தவும்!

## தமிழ்நாடு அரசு செய்தி வெளியீடு!

சென்னை, ஜுன் 30-

மேட்டூர் அணைக்கு கர்நாடக அணையிலிருந்து உபரி நீர் திறந்து விடப்பட்டுள்ளதால் அணைக்கு நீர் வரத்து அதிகரித்து, அதன் முழுகொள்ளளவான 120 அடியை எட்ட உள்ளதால் உபரி நீர் திறந்து விடுவதை சீரான முறையில் அனுப்பிடவும், அந்நீரினை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளவும் விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.



சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38வது வட்டத்தில் பி.எல்.ஏ2, பி.எல்.சி, பி.டி.ஏ. ஆலோசனைக் கூட்டம் வட்டக் கழக செயலாளரும் 4வது மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன் தலைமையில் மேற்கு பகுதி செயலாளர் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் முன்னிலையில் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, தொகுதி பொறுப்பாளர் கே.வி.லோகேஷ், ஆகியோர் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினர்.கூட்டத்தில் மாஸ் டி.வெங்கடேசன், ஏ.டி.மணி, எஸ்.கிருஷ்ணன், மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள் பாகம் முகவர்கள் பி.எல்.சி, பி.டி.ஏ, கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.06.2025 அன்று டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து நீர் திறந்து விடப்பட்டதுடன், மேட்டூரிலிருந்து திறந்தவிடப்பட்ட நீர் 15.06.2025 அன்று கல்லணை வந்தவுடன், கல்லணை மதகுகளையும் திறந்து வைத்து, நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டுமெனவும் விவசாயிகளை அறிவுறுத்தினார்கள்.

முன்னதாக, இந்த ஆண்டு 98 கோடி ரூபாய் செலவில் தூர் வாரும் பணிகள் சீரிய முறையில் மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பாசனத்திற்கு நீரை கொண்டு செல்ல தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மேட்டூர் அணையிலிருந்து விடுவிக்கப்பட்ட நீர் படிப்படியாக உயர்த்தப்பட்டு விவசாயப் பணிகளின் தேவைகேற்ப ஜுன் 12 முதல் நேற்று (28.06.2025) நேற்று முன்தினம் காலை வரை வினாடிக்கு 12,000 கனஅடி முதல் 26,000 கன அடி வரை நீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் கர்நாடக அணையிலிருந்து குறிப்பாக கே.ஆர்.எஸ். மற்றும் கபினி அணைகளிலிருந்து அதன் நீர் பிடிப்பு பகுதியில் மழை பொழிவு அதிகரித்துள்ளதால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு நேற்று முதல் வினாடிக்கு 70,000 கனஅடி முதல் 80,000 கனஅடி வரை அதிகரித்துள்ளது.

நேற்று (28.06.2025) மாலை 4.00 மணி நிலவரப்படி81,000 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் முழுக்கொள்ளளவான 120 அடியினை இன்று இரவு அல்லது நாளை காலை எட்ட உள்ளது. இச்சூழலில் 16 கண் மதகுகள் வழியாக உபரி நீர் திறக்கப்படவுள்ளது, இதற்கு தேவையான வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அரசு அறிவுறுத்தியுள்ளது.

மேலும், கிடைக்கும் உபரி நீரை முறை சார்ந்த குளங்கள், ஏரிகள் மற்றும் சரபங்கா போன்ற திட்டங்களுக்கு திருப்பிவிட்டு நீரை முடிந்த அளவு சேமிக்க நீர்வளத்துறை அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையானது கடந்த நான்கு பாசன ஆண்டுகளில் 2021-2022, 2022-2023 மற்றும் 2024—2025-இல் அதன் முழு கொள்ளளவை எட்டியுள்ளது.

கடந்த 2024-2025 -ஆம் ஆண்டில் 30.07.2024, 12.08.2024 மற்றும் 31.12.2024 ஆகிய நாட்களில் முழுகொள்ளளவை (120.00 அடி) எட்டியது குறிப்பிடத்தக்கதாகும்.

பொதுமக்கள் வெள்ள அபாய எச்சரிக்கையை கருத்தில் கொண்டு விழிப்புடன் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

### சேப்பாக்கம் பகுதி தி.மு.க. கழக தகவல் தொழில் நுட்ப அணி இணைந்து

# "ஓரணியில் தமிழ்நாடு" என்கின்ற செயலி (APP) பற்றி விளக்கி காணொலி காட்சி மூலமாக பாக முகவர்கள் - பாக தகவல் தொழில்நுட்ப முகவர்கள் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிக் கழகச் செயலாளர் – எஸ்.மதன்மோகன் எம்.சி. அறிவிப்பு!

சென்னை மேற்கு மாவட்டம், சேப்பாக்கம் பகுதி தி.மு.க. மற்றும் தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி இணைந்து "ஓரணியில் தமிழ்நாடு" என்கின்ற செயலி (APP) பற்றி விளக்கி காணொலி காட்சி மூலமாக பாக முகவர்கள் (BLA2) மற்றும் பாக தகவல் தொழில்நுட்ப முகவர்கள் (BDA) நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் சேப்பாக்கம் பகுதிக் கழகச் செயலாளர், மண்டலக் குழுத் தலைவருமான எஸ்.மதன்மோகன் எம்.சி. தலைமையில் நாளை (01.07.2025 செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணி அளவில், சிந்தாதிரிப்பேட்டை, காமாட்சி மீனாட்சி திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், சென்னை மாநகராட்சி பணிகள் நிலைக் குழுத் தலைவர் நே.சிற்றரசு எம்.சி, தொகுதிப் பார்வையாளர், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் சி.எச்.சேகர் கலந்து கொண்டு உரையாற்றுகின்றனர். எனவே சேப்பாக்கம் பகுதிக்குட்பட்ட வட்டக் கழகச் செயலாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் (BLA2) மற்றும் பாக தகவல் தொழில்நுட்ப முகவர்கள் (BDA) மற்றும் பகுதி தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**எஸ்.மதன்மோகன்** எம்.சி.
செயலாளர் - சேப்பாக்கம் பகுதி தி.மு.க.